தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# மரம் வளர்ப்பு பற்றி தேசிய கருத்தரங்கு

**கோவை, நவ. 27–**

வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், மரம் வளர்ப்பு குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு நடந்தது.

இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக்குழுவின் கீழ், ஆர்.எஸ்.புரத்தில் வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் இயங்கி வருகிறது. இங்கு, மரம் வளர்ப்பு குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு நடந்தது. பெங்களூரு, டேராடூன், அசாம், ஜபல்பூர், சிம்லா, ஜோத்பூர், ராஞ்சி, ஐதராபாத் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் பல்வேறு நிறுவனங்களை சேர்ந்த, 25க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

தொடர்ந்து, காத்தாடி மரம், இலுப்பை, தைலம், தேக்கு, சால், தேவதாரு, வேம்பு என, 15 விதமான மரங்கள் குறித்து, விஞ்ஞானிகள் கலந்துரையாடினர். இம்மரங்கள் வளர்ப்பு குறித்தும், இவற்றை பெருக்குவது குறித்தும் நிகழ்ச்சியில் பேசப்பட்டது.

61. News in Dinamalar, Coimbatore, 27.11.2022, National Seminar on Tree Cultivation held at IFGTB.